**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**


# Women's Games Shown in Kalithogai

**Dr. A. Manoharan**, Assistant Professor of Tamil, Jeppiaar Institute of Technology, Chennai, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0001-1940-5898
**DOI: 10.5281/zenodo.14752459**

## Abstract

*People living in the Sangam period enjoyed playing various types of games to maintain their physical health and for entertainment. During the Sangam period, games were divided into various types such as children's games, adult games, group games, men's games, and women's games and both adults and children spent their leisure time playing games. There is various evidence in Sangam literature that they lived for many years with good physical health, mental peace and happiness through games. In this way, in Kalithogai, one of the Sangam literature, the heroic games and recreational games of the Tamils are classified separately for men and women. Among these, this article is designed to examine the women's games featured in Kalithogai.*

**Keywords:** Oosal, Alavan Aattam, Sunnam Thuval, Thai Neeradal, Asathiyadal, Suduvan Kaai, Vallai, Chiththirannam, Ambuli

## References

[1] Ragavaiyangar, Mu. *Vilangu Por Vilaiyattu.* Pari Nilaiyam, Chennai, 1964.
[2] Sivakama Sunthari, Su. *Sanga Ilakkiya Vilaiyattuk Kalanjiyam*. New Century Book House, Chennai, 1995.
[3] Devaneyan, Gna. *Thamizhar Vilaiyaattukal.* Kazhaka Veliyedu, Chennai, 1962.
[4] Balasubiramaniyan, Ira. *Thamizhar Nattu Vilaiyaattukkal*. Ulakath Thamizharaaycchi Niruvanam, Chennai, 1980.
[5] Pichai, A. *Thamizh Panpattil Vilaiyattukkal.* Kabilan Pathippakam, Chennai, 1983.
[6] *Thamizh Perakaraathi Thokuthi* - 2, Chennai Palkalaik Kazhakam, Chennai, 1982.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**



# கலித்தொகை காட்டும் மகளிர் விளையாட்டுக்கள்

**முனைவர் ஆ. மனோகரன்,** தமிழ் உதவிப்பேராசிரியர்,
ஜேப்பியார் தொழில் நுட்பக்கல்லூரி , சென்னை, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0009-0001-1940-5898**
**DOI: 10.5281/zenodo.14752459**

**ஆய்வுச்சுருக்கம்**

*சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் தங்களின் உடல் நலனைப் பேணுவதற்காகவும், பொழுது போக்கிற்காகவும் பல்வேறு வகையான விளையாட்டுக்களை விளையாடி மகிழ்ந்துள்ளனர். சங்க காலத்தில் சிறுவர் சிறுமியர் விளையாட்டு, பெரியவர் விளையாட்டு, குழு விளையாட்டு, ஆடவர் விளையாட்டு, மகளிர் விளையாட்டு எனப் பலவகையாக விளையாட்டுக்களைப் பிரித்து பெரியோரும் சிறியோரும் தங்களது ஓய்வு நேரத்தை விளையாட்டில் கழித்துள்ளனர். விளையாட்டின் வாயிலாக நல்ல உடல் ஆரோக்கியத்துடனும் மனதிடத்துடனும் மகிழ்ச்சியுடனும் பல ஆண்டுகள் வாழ்ந்தார்கள் என்பதற்கு சங்க இலக்கியங்களில் பல்வேறு சான்றுகள் காணப்படுகின்றன. இவ்வகையில் சங்க இலக்கியங்களில் ஒன்றான கலித்தொகையில் தமிழர்களின் வீர விளையாட்டுக்களும் பொழுது போக்கு விளையாட்டுக்களும் ஆடவர், மகளிர்கென தனித்தனியாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றுள் கலித்தொகையில் இடம்பெற்றுள்ள மகளிர் விளையாட்டுக்களைப் பற்றி ஆராயும் விதமாக இக்கட்டுரை அமையப் பெற்றுள்ளது.*

**குறிப்புச்சொற்கள்:** ஊசல், அலவன் ஆட்டல், சுண்ணம் தூவல், தை நீராடல், அசதியாடல், சுடுவன் காய், வள்ளை, சித்திரான்னம், அம்புலி.

**முன்னுரை**

பழங்கால வேட்டைச் சமூக மாந்தர்கள் வாழும் இடங்களிலேயே விளையாட்டுக்கள் தோற்றம் கொண்டிருக்க வாய்ப்புக்கள் உள்ளன. விலங்குகளை வேட்டையாடுதலும், ஆயுதங்களை கையாலுதலும், உடல் வலிமையைப் பேணுதலும் விளையாட்டுகளுக்கு வழிவகுத்திருக்கக் கூடும். எனினும் மனித குலம் பண்பாட்டில் வளரத் தொடங்கிய காலத்திலேயே விளையாட்டுக்களும் முதன்மை பெற்றன எனலாம். சங்ககாலத் தமிழர்கள் பெரும்பாலும் சமூகம் சார்ந்த செயல்பாடாகவே விளையாட்டைக் கருதினர். சூழ்நிலை விளையாட்டுக்களும், மைதானங்களின் நடுவே இடம்பெற்ற வீர விளையாட்டுக்களும் சமூக செயல்பாடுகளாகவே திகழ்ந்தன. அரசுகள், ஊர் மன்றங்கள் பல்வேறு விளையாட்டுக்களை நடத்தி விளையாட்டுக்களில் வெற்றி பெற்றோருக்கு பரிசும் மதிப்பும் அளித்தனர். சமூக அங்கத்தவர் எல்லோரும் தத்தம் வயது, பால் என்பவற்றிற்கேற்பப் பல்வேறு

விளையாட்டுக்களில் ஈடுபட்டனர், பெண்களை ' வீட்டுக்குள் வளர்த்தல்' ( இச்செரித்தல் ) என்னும் நிலை அக்காலத்தில் காணப்பட்டாலும் சிறுமியர், இளம் மகளிர் பல்வேறு விளையாட்டுக்களில் ஈடுபட்டிருக்கின்றனர். ஆண்களைப் போலவே பெண்களும் பல விளையாட்டுக்களில் ஈடுபட்டுள்ளனர், மகளிர் வெளியில் சென்று தத்தம் தோழியரோடு விளையாடுவதே அறம். அவ்வாறு விளையாடுவதால் உடலும் உள்ளமும் ஆக்கம் பெறும். மாறாக வீட்டிற்குள் இருந்தால் அது அறமும் இல்லை, ஆக்கமும் தேய்ந்து விடும் என்று உணர்ந்த அக்கால மகளிர் பல விளையாட்டுக்களில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு உள்ளம் மற்றும் உடல் வலிமையோடு வாழ்ந்து மகிழ்ந்திருந்த குறிப்புக்கள் தமிழ் இலக்கியங்களில் நிரம்பக் காணப்படுகின்றது. பழந்தமிழ் இலக்கியங்களில் ஒன்றான "கற்றறிந்தார் ஏத்தும் கலி" என்று சான்றோர்களால் புகழப்பெறும் கலித்தொகையில் தமிழர்களின் வீர விளையாட்டுக்கள் மற்றும் பொழுதுபோக்கு விளையாட்டுக்கள் எண்ணிலடங்கா உள்ளன. இவற்றுள் மகளிர் விளையாட்டுக்களைப் பற்றி ஆராயும் நோக்கில் "**கலித்தொகைகாட்டும் மகளிர் விளையாட்டுக்கள்"** என்னும் தலைப்பில் இக்கட்டுரை அமைகிறது.

***கலித்தொகை***

கலிப்பாவினால் ஆன பாடல்களைக் கொண்டது கலித்தொகையாகும். கலித்தொகை பாவகையால் பெயர்பெற்றது. இலக்கண நூல்களில் கூறப்படும் அகப்பொருள் பகுதிக்கு இந்நூல் இலக்கணமாய்த் திகழ்கிறது. "**கலி என்னும் சொல்லுக்கு களிப்பு, களிப்பின் பெருக்கு, செருக்கு, ஆரவாரம் முதலிய எழுச்சி நிலைகளை உணர்த்துகிறது."** (தமிழ்ப் பேரகராதி, தொகுதி – 2. ப.227). கலிப்பாவிற்குரிய ஓசை துள்ளலோசை. துள்ளல் என்பதை ஆரவாரம் அல்லது எழுச்சி என்று பொருள் கொள்ளலாம்.

கலித்தொகையில் பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் ஆகிய ஐந்து திணைகளிலும் 150 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. பாலைத் திணையில் 35 பாடல்களும், முல்லைத் திணையில் 17 பாடல்களும், நெய்தல் திணையில் 33 பாடல்களும், பாலைத் திணையும் மருதத் திணையும் சம எண்ணிக்கையில் 35 பாடல்களைப் பெற்றுள்ளன. கலித்தொகையில் பாடப்பெற்றுள்ள 150 பாடல்களையும் தொகுத்தவர் நல்லந்துவனார் என்னும் புலவராவார். கலித்தொகையின் முதல் பதிப்பு 1887 ஆம் ஆண்டில் வெளிவந்ததாகும். இதனைச் சுவடிகளில் இருந்து ஆராய்ந்து வெளியிட்டவர் அறிஞர் சி.வை.தாமோதரம் பிள்ளை ஆவர். இவ்வெளியீடு ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரையுடன் கூடியதாகும்.

**விளையாட்டு பற்றி அறிஞர்களின் கருத்து**

விளையாட்டு பற்றி மொழிஞாயிறு ஞா.தேவநேயப்பாவாணர் அவர்கள், **"விளை என்றால் விருப்பம் எனப் பொருள் கொண்டு விரும்பியாடும் ஆட்டு விளையாட்டு" (ஞா. தேவநேயன். ப. 5)** என்று விளக்குகிறார். மேலும், **"விளையாட்டு என்பது வாழ்க்கைக்குப் பயிற்சியளிக்கும் களமெனக் கூறலாம்" (இரா.பாலசுப்பிரமணியன், ப. 448)** என்பார் டாக்டர்

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

இரா. பாலசுப்பிரமணியம். **"இன்பம் விளைவிக்கும் ஆட்டம்" (மு. இராகவையங்கார், ப. 297)** என்று இராகவையங்கார் கூறுகிறார். இவ்வகையில் விளையாட்டு பற்றிய விளக்கங்களைத் தொகுத்துப் பார்க்கும் பொழுது விளையாடென்பது மகிழ்ச்சி நிறைந்த செயல் என்று விளக்கம் கொள்ளலாம்.

**பாரம்பரிய விளையாட்டுக்கள்**

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்கள் கலித்தொகையில் முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளன. அவ்வகையில் மகளிர் விளையாட்டாக ஊஞ்சலாடுதல் (குறி.கலி.4, நெய்.கலி.14), குரவையாடுதல் (குறி.கலி.3,), பந்தாட்டம் (குறி.கலி.4, 15-21), சிறுவீடுகட்டி விளையாடுதல் (குறி.கலி.15), குழுவாகக் கூடி ஆடுதல் (மரு.கலி.18), தாயம் (நெய்.கலி.19) போன்ற விளையாட்டுக்களை மகளிர் சிறுவயதிலிருந்தே விளையாடி மகிழ்வர். இத்தகு விளையாட்டுக்களின் மூலம் தமிழர்களின் பாரம்பரிய மதிப்பினை அறிய இயலும்.

**மகளிர் விளையாட்டுக்கள்**

- ஊஞ்சல்
- அலவன் ஆட்டல் ( நண்டு )
- எதிரொலி கேட்டல்
- சுண்ணம் தூவல்
- பந்து விளையாட்டு
- தாயம்
- பாவை விளையாட்டு
- தை நீராடல்
- வள்ளைப் பாட்டு
- குரவை
- சிறுசோறு ஆக்கல்
- அசதியாடல்

போன்ற விளையாட்டுக்கள் மகளிர் விளையாட்டுக்களாக கலித்தொகையில் சுட்டப்பெற்றுள்ளன.

**ஊசல் (ஊஞ்சல்)**

**"ஊஞ்சல் ஊர்ந்து ஆட ஒருஞான்று வந்தானை" (குறி.கலி., 1)** என்று தலைவன், தலைவி ஆடின ஊசலை ஆட்டினான் என்ற செய்தி இப்பாடல் அடியில் இடம்பெற்றுள்ளது.

**தாழாது உறைக்கும் தடமலர்த் தண்தாழை**
**வீழ்ஊசல் தூங்கல் பெறின் ( நெய். கலி., 14)**

என்ற பாடல் அடிகளில் நெய்தல் நில மக்கள் ஊஞ்சலைச் சுறாவின் வெண் மருப்பினைப் பலகையாகவும், தாழை விழுதுகளை ஊஞ்சல் கயிறாகவும், புறவிதழ் நீங்கிய நெய்தல்

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

மலர்களை நாராய்க் கட்டியும் ஊஞ்சலை அலங்கரித்துள்ளனர். மகிழ்ச்சிக்காகவும் பொழுதுபோக்கிற்காகவும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையை வளர்ப்பதற்காகவும் இயற்கைச் சூழலை அனுபவித்து மகளிர் விளையாடியுள்ளனர்.

**அலவன் ஆட்டல் ( நண்டு )**

கடற்கரைப் பகுதியிலும் வயல்வெளிப் பகுதிகளிலும் உள்ள அலவன் கூட்டம் கரைநோக்கி வரும்போது அவற்றைக் கைகளில் பிடித்து ஆட்டியும் மோதவிட்டும் மகிழ்ந்துள்ளனர். இதனை, "**உவறுநீர் உய்யர் எக்கர் அலவன் ஆடு அலைவரி" (நெய்.கலி., 19 )** கடற்கரையில் நீர்படிந்த மணற் பகுதியில் மகளிர் விளையாடிய செய்திகளை இப்பாடல் அடி விளக்குகிறது.

**எதிரொலி கேட்டல்**

மலைப்பகுதிகள், குடியிருப்பு இல்லாத பகுதிகள் மற்றும் குகைப் பகுதிகளுக்குச் சென்று ஒலி எழுப்பி அந்த ஒலியே எதிரொலித்து வருவதைக் கேட்டுப் பெண்கள் வியந்து மகிழ்ந்து விளையாடிப் பொழுதுபோக்கியுள்ளனர். இதனை,

**இலங்குதாழ் அருவியோடு அணிகொண்ட நின்மலைச்**
**சிலம்புபோல் கூறுவது கூறும் (குறி. கலி., 10 )**

என்ற பாடல் அடிகளின் மூலம் அறியமுடிகிறது.

**சுண்ணம் தூவல்**

சுண்ணம் என்பது ஒருவகை மணப்பொடி. இதனை உருவாக்கும் பொறுப்பினைப் பெண்கள் பெற்றிருந்தனர். சுண்ணம் உருவாக்களில் தங்கள் முழுத் திறனையும் காட்டிப் போட்டியில் வெற்றிபெற்று முதலிடத்தைப் பெற்றுள்ளனர். ஒருவர் மீது ஒருவர் சுண்ணப் பொடியினைத் தூவி மகிழ்ந்துள்ளனர். இதனை, "**சுண்ண நீறு ஆடி" ( மரு. கலி., 32 )**
என்று சுண்ணத் தூவலைக் கலித்தொகைப் பாடலடி எடுத்துக்காட்டுகின்றது.

**பந்து விளையாட்டு**

பந்து விளையாட்டு மகளிர் விளையாட்டாகச் சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளது. மகளிர் பூக்களைக் கொண்டு பந்து விளையாடிய செய்தி இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளது. பொதுமக்கள் கண்டு களிக்கும் வண்ணம் பெரிய அளவில் பந்து விளையாட்டு நடத்தப்பட்டிருப்பதை இலக்கியங்கள் வழி அறியலாம். **"வரிபந்து கொண்டு ஓடி" (குறி. கலி., 15) "விண்டோய் வரைப்பந்து எறிந்த அயாவீட / தண்தாழ் அருவி அரமகளிர் ஆடுபவே (குறி. கலி., 4)** என்று வானத்தை தொடுமளவிற்குப் பந்தைத் தூக்கிப் போட்டு விளையாடியதைக் கலித்தொகை கூறுகின்றது.

**தாயம்**

பழங்காலத்தில் புகழ்மிக்க விளையாட்டாகத் தாயம் காணப்பட்டுள்ளது. இத்தாயம் விளையாட்டை சிறியவர்களும் பெண்களும் ஆண்களும் பெரியவர்களும் விளையாடுவர்.

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

**"பழங்கால நாகரீகத்தில் தாய விளையாட்டில் சுடுவன் காய்களைப் பயன்படுத்தி விளையாடியதாகத் தொல்பொருள் ஆய்வாளர்கள் குறிப்பிடுவர். இதனை, மலையாளிகள் 'கம்பிதாயம்' என்று அழைப்பார்கள்." (அ, பிச்சை, ப. 32)**

என்று குறிப்பிட்டுள்ளார். இத்தாய விளையாட்டு கலித்தொகையில் இடம்பெற்றுள்ளதை,

**முத்துஉறழ் மணல்எக்கர் அளித்தக்கால் முன்ஆயம்**
**பத்துஉருவம் பெற்றவன் மனம் போல (நெ.கலி., 19)**

என்று தாய விளையாட்டில் பத்துத் தாயங்களைப் பெற்றவனுடைய மனம்போலத் தலைவி இருந்த நிலையினை இப்பாடல் அடிகள் உணர்த்துகின்றன.

**பாவை விளையாட்டு**

பாவை என்பது விளையாட்டுப் பொருள்களுள் ஒன்றான பதுமையைச் சுட்டும் பொருளில் ஆளப்பெற்றுள்ளது. பாவையை வைத்து சிறுவர், சிறுமியர் விளையாடுவதுண்டு. பாவை என்னும் சொல் ஆண், பெண் ஆகிய இருவகையில் அமைக்கப்பட்ட உருவங்களைக் குறிக்கும். அவை மண் பாவை, மரப்பாவை, பொற்பாவை, மலர்ப்பாவை என்று அழைக்கப்படுகின்றன. மகளிர் மரப்பாவைகளை மணமகனாகவும், மணமகளாகவும் கற்பனை செய்து அவற்றிற்கு மணம் பேசித் திருமணம் செய்து விளையாடுவர். இதனை,

**சிறுமுத்தனைப் பேணிச் சிறுசோறு மடுத்த நீ**
**நறுநுத லவரொடு நக்கது நன்கு இயைவதோ (குறி. கலி., 23)**

என்று ஆண் மரப்பாவை சிறுமுத்தன் என்ற சொல்லால் கலித்தொகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இன்றும் சிறுமியர் பாவைகளுக்கு மணம் செய்து விளையாடி மகிழ்தலைக் நாட்டுப்புறங்களில் காணமுடிகிறது.

**வள்ளைப் பாட்டு**

சங்ககால விளையாட்டுக்களுள் மகளிர்க்கே உரிய விளையாட்டு வள்ளைப் பாட்டு.வள்ளை என்பது மகளிர் தங்களது கைகளில் அணிந்திருக்கும் வளையல். மகளிர் உரலில் உலக்கை கொண்டு இடிக்கும்போது சோர்வு தோன்றாது இருக்கும் பொருட்டுப் பாடப்படும் பாட்டு வள்ளைப்பாட்டு. இதனை,

**உலக்கைப் பாட்டை உரல்பாட்டு, அவலிடி,**
**அம்மனை, வள்ளை (சு. சிவகாம சுந்தரி, ப., 107)**

என்று சிவகாமி சுந்தரி குறிப்பிடுகிறார்.

கலித்தொகையில் தான் வள்ளைப்பாட்டு குறித்து அதிகப் பாடல்களும் செய்திகளும் காணப்பெறுகின்றன. உலக்கைகள் செல்வ நிலைக்கு ஏற்றாற்போல் யானைக் கொம்பாலும் சந்தன மரத்தாலும் ஆன உரலில் இட்டு நெல்லைக் குற்றி எடுப்பர். முத்து நிறைந்த யானைத் தந்தத்தால் ஆன உலக்கையைக் கொண்டு குற்றிய நிலையினை,

**முகைவளர் சாந்துரல் முத்தார் மருப்பின்**

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

**வகைசால் உலக்கை வடான்வயின் ஒச்சி (கலி., 40: 4-5)**

என்ற பாடலடியும், மூங்கில் நெல்லினை பாறை உரலில் இட்டு யானைத் தந்தத்தால் குற்றியதை,

**பாடுகம் வாவாழி தோழி வயக்களிற்றுக்**

**கோடு உலக்கை யாகநல் சேம்பின் இலைசுளகா (குறி. கலி., 5)**

என்ற பாடலடிகளும் உணர்த்துகின்றன. கலித்தொகையின் 42 ஆவது பாடல் தலைவன் செய்த கொடுமையினை வள்ளைப்பாட்டாக பாடத் தோழியினைத் தலைவி அழைப்பதாக அமைந்துள்ளது.

**குரவை**

குரவை என்பது ஒருவகயான கூத்து ஆகும். இக்கூத்தினைப் பெண்கள் ஆடுவது மரபு. இதனை விளையாட்டாகவும் மேற்கொண்டுள்ளனர். குரவை என்பதற்கு **"ஒலி, கடல் , கூத்து, கைகோர்த்தாடல், பெருஞ்சத்தம், மகளிர் மகிழ்ச்சி ஒலி"** எனத் தமிழ் அகராதி பொருள் தருகிறது.

**குரவை தழீஇ யாம் ஆடக் குரவையுள்**

**கொண்டு நிலைபாடிக் காண் (கலி., 39: 28-29)**

என்ற பாடலடிகள் வாயிலாக மகளிர் குரவை ஆடும்போது குரவைக் கூத்துக்கேற்ற பாடலை ஆடிப் பாடியுள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

**சிறுசோறு ஆக்கல்**

சிறுமிகள் மணல் வீடு கட்டி சின்னச் செப்புகளை வைத்துச் சோறாக்கி விளையாடுவது இவ்விளையாட்டு ஆகும். தமிழ் அகராதி சிறுசோறு ஆக்கல் என்பதற்கு மணற்சோறு, சித்திரான்னம் எனப் பொருள் தருகிறது. "**சிறுசோறு மடுத்து" (கலி., 59)** என்ற பாடலடி மகளிர் சிறுசோறு சமைத்து விளையாடியமையைக் குறிப்பிடுகின்றது.

**சிற்றில் சிதைத்தல்**

சிறுமியர் கடல் அல்லது ஆற்று மணலில் சிறிய சிறிய வீடுகளைக் கட்டித் தம்முடைய கற்பனைக்கு ஏற்ப உருவாக்கி விளையாடுவர். சிற்றில் என்பதற்கு சிறுகுடில், சிறு வீடு, மண் வீடு என தமிழ் அகராதி கூறுகிறது.

**தெருவில் நாம் ஆடும்**

**மணற் சிற்றில் காலின் சிதையா (கலி., 51)**

என்ற பாடல் அடிகள் தலைவி சிறுவயதில் சிறு வீடு கட்டி விளையாடிய போது தலைவன் அதனை அழித்தான் என்ற செய்தி குறிப்பிடுகிறது.

**அசதியாடல்**

அசதியாடல் என்பது தனித்தும் ஓரிருவரைத் துணையாகச் சேர்த்துக் கொண்டும் விளையாடும் விளையாட்டு ஆகும். ஒருவரை ஒருவர் பரிகாசம் செய்து விளையாடுவது.

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

அசதியாடல் என்பது பரிகசித்தல், வேடிக்கை, வார்த்தை கூறுதல், சிரித்துப் பேசுதல் என்று தமிழ் அகராதி கூறுகிறது.

**வல்லுப் பலகை யெடுத்து நிறுத்தன்ன**
**கல்லாக் குறள கடும்பகல் வந்தெம்மை**
**இல்லத்து வாவவென மெய்கொளீஇ யெல்லாநின்**
**பெண்டி ருளர் மன்னோ கூறு (கலி., 94)**

என்ற பாடல் அடிகள் குறளனும் கூனியும் உரையாடும் அசதியாடல் விளையாட்டினைக் குறிப்பிடுகிறது.

**அம்புலி காட்டல்**

ஆண், பெண் என்ற இருபால் குழந்தைகளிடமும் பெரியவர்கள் அம்புலி காட்டி விளையாடச் செய்வர். அம்புலி என்பது பிள்ளைத் தமிழில் ஒரு உறுப்பு. சந்திரனைக் காட்டுதலைக் குறிக்கும் என்பர்.

**ஐய! திங்கட் குழவி! வருக! என யான் நின்னை**
**அம்புலி காட்டல் இனிது (கலி., 80)**

என்ற பாடலடிகள் அம்புலி காட்டுதலைக் குறிப்பிடுகிறது.

**முடிவுரை**

பழந்தமிழர்கள் பல்வேறு விளையாட்டுகளின் வழியாக மிகுந்த மகிழ்ச்சியுடன் இருந்தனர். ஆடவர் விளையாட்டு, மகளிர் விளையாட்டு, சிறுவர் சிறுமியர் விளையாட்டுக்கள் என பல்வேறு விளையாட்டுக்கள் வீரத்திற்காகவும் பொழுதுபோக்கிற்காகவும் விளையாடப்பட்டதை கலித்தொகை தெளிவுபடுத்துகிறது. இவ்விளையாட்டுக்கள் அனைத்தும் தலைவன், தலைவி, தோழி ஆகியோரிடையே நடைபெறும் விளையாட்டுக்களாக அமைந்துள்ளன. கலித்தொகையில் பெண்கள் பல்வேறு தொழில்களில் அதிகமாக ஈடுபட்டிருந்தனர். எனவே அவர்கள் உழைப்பின் களைப்புத்தீர விளையாட்டினை மேற்கொண்டு மகிழ்ச்சியுடன் இன்பம் களித்தனர். பெண்கள் தத்தம் பருவத்திற்கும் வளர்ச்சிக்கும் ஏற்றவாறு விளையாடிய விளையாட்டுக்களில் மனிதநேயப் பண்பு மேலோங்கி காணப்படுவதை கலித்தொகை பாடல்கள் உறுதிப்படுத்துகிறது.

**துணைநூற் பட்டியல்**

[1] இராகவையங்கார், மு. *விலங்குப் போர் விளையாட்டு*. பாரி நிலையம், சென்னை, 1964
[2] சிவகாம சுந்தரி, சு. *சங்க இலக்கிய விளையாட்டுக் களஞ்சியம்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1995.
[3] தேவநேயன், ஞா. *தமிழர் விளையாட்டுக்கள்*. கழக வெளியீடு, சென்னை, 1962.

**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

[4] பாலசுப்பிரமணியன், இரா. *தமிழர் நாட்டு விளையாட்டுக்கள்.* உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1980.

[5] பிச்சை, அ. *தமிழ்ப் பண்பாட்டில் விளையாட்டுக்கள்.* கபிலன் பதிப்பகம், சென்னை, 1983.

[6] *தமிழ்ப் பேரகராதி தொகுதி* – 2, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1982.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.